TNPSC Tamil Current Affairs 12th April 2017

1). 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற "Asian School Hockey Championship 2017" போட்டியில் எந்த நாட்டின் அணி வெற்றி பெற்றது ?

A).India.

B).China.

C).Iran.

D).Malaysia.

விடை : A). India.

மத்திய பிரதேசம் போபால் நகரில் உள்ள Aishbagh Stadium த்தில் நடைபெற்ற "Asian School Hockey Championship 2017" போட்டியில் இந்திய அணி மலேசிய அணியை (5-1) என்ற கணக்கில் வீழ்த்தி இந்திய அணி வெற்றி பெற்றது. இவ்வாட்டத்தில் இந்திய அணியைச் சேர்ந்த "Alishan Mohammad" 2 புள்ளிகளையும், "Pratap Lakra" 2 புள்ளிகளையும் "Maninder Singh" 1 புள்ளியினையும் பெற்று வென்றனர். மலேசிய அணியைச் சேர்ந்த "Ahimullah Anuar Esook" என்பவர் 1 புள்ளியினைப் பெற்றார்.

2). "UNHCR(United Nations High Commission for Refugees) "ன் நல்லெண்ணத் தூதராக நியமிக்கப்பட்டுள்ள Kristin Davis எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

A).Belgium.

B).Australia.

C).United States.

D).Norway.

விடை : C). United States.

"UNHCR(United Nations High Commission for Refugees) "ன் நல்லெண்ணத் தூதராக நியமிக்கப்பட்டுள்ள Kristin Davis அமேரிக்கா (United States) வைச் சேர்ந்த பாராட்டப்பட்ட நடிகை மற்றும் மனிதநேயம் மிக்க பெண்மனி. மீடிய நேர்காணல்கள், சமூக வலைதள சேனல்கள் மற்றும் இவர் UNHCR(United Nations High Commission for Refugees) நிகழ்ச்சிகளுக்கு நிதி திறட்டுதல் மற்றும் பிரச்சாரம் மேற்கொள்ளுதல் ஆகிய செயல்பாடுகளின் மூலம் இவர்

இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். அதுமட்டுமல்லாது 2016 ஆம் ஆண்டு (DR Congo) வில் நடந்த பாலியல் வண்கொடுமையில் பாதிக்கப்பட்ட பெண்கள் அனைவருக்கும் நிதி திரட்டுவதர்காக ஆஸ்த்திரேலியாவிற்கு சென்றார். . ”UNHCR(United Nations High Commission for Refugees) இன் தலைமையிடம் சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனீவாவில் உள்ளது.

3). சமீபத்ததில் மறைந்த முன்னால் மத்திய இனைஅமைச்சர் Akhilesh Das Gupta எந்த கட்சியைச் சேர்ந்தவர்?

A).Bharatiya Janata Party(BJP).

B).Indian National Congress(INC).

C).All India Trinamool Congtress.(AITC).

D).National Congress Party(NCP).

விடை : B). Indian National Congress(INC).

மறைந்த முன்னால் மத்திய இனைஅமைச்சர் Akhilesh Das Gupta இரும்பு துறை அமைச்சராக தலைமையின் கீழ் அமைந்த மத்திய அரசாங்கத்தில் பணி புரிந்த இவர் சமீபத்ததில், உத்திர பிரதேச மாநிலத்தில் உள்ள லக்னோ வில் மரணமடைந்தார். இவர் மிகச் சிறந்த கல்வியாளர், ஆசிரியர், இந்திய அரசியல்வாதி மற்றும் சமூக சேவகர். இவர் Batminton Association of India(BAI) வின் தலைவராகவும் Batminton Asia Confederation(BAC) இன் துணைத் தலைவராகவும் Executive Council of Batminton World Federation(BWF) இன் உறுப்பினராகவும் (Indian Olympic Association) இன் துணைத் தலைவராகவும் பணியாற்றினார்.இவர் சுமார் 15 வருடங்களாக(1996-2014) ராஜ்ய சபா(மாநிலங்கள் அவை) உறுப்பினராக பணியாற்ரினார். இவர் மறைந்த சுதந்திர போராட்ட வீரரும் முன்னால் உத்திர பிரதேச முதலமைச்சருமான Shri Babu Banarasi Das அவர்களின் மகனாகும்.

4). பின்வரும் துறைகளுல் எந்த துறைக்காக SAMPADA (Scheme for Agro-Marine Produce Processing and Development of Agro-Processing Clusters) மத்திய அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்படவுள்ளது?

A).சுரங்கம்.

B).கல்வி.

C).உணவு பதப்படுத்துதல்.

D).சுற்றுலா.

விடை : C). உணவு பதப்படுத்துதல்.

மத்திய அரசாங்கத்தினால் உணவு பதப்படுத்துதல் துறைக்காக SAMPADA (Scheme for Agro-Marine Produce Processing and Development of Agro-Processing Clusters) திட்டத்திற்கும் மற்றும் வேரு பல புதிய திட்டத்திற்கு 6,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் தொடங்கின. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் வீணாகும் உணவுப் பொருட்களைக் குறைப்பதும், விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பதுமாகும்.

5). புதிதாக நியமிக்கப்பட்டுள்ள "Telecom Disputes Settlement & Appelete Tribunal"(TDSAT) இன் தலைவர் யார்?

A).Shiva Kirti Singh.

B).Bipin Bihari Srivastava.

C).S B Sinha.

D).D P Wadhwa.

விடை : A). Shiva Kirti Singh.

"Telecom Disputes Settlement & Appelete Tribunal(TDSAT)" ற்குத் தலைவராக Shiva Kirti Singh புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி. "Telecom Disputes Settlement & Appelete Tribunal"(TDSAT) இன் விதிகளின் படி தலைவராக நியமிக்கப்படுபவர் உச்சநீதிமன்ற நீதிபதி அல்லது உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருக்க வேண்டும். நீதிபதி Aftab Alam, 2016 இல் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து இப்பதவிக்கான பணியிடம் காலியாக இருந்த நிலையில் இவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அத்துறையில் ஏற்பட்ட சர்ச்சைகளுக்குத் தீர்ப்பளித்து, சேவை வழங்குபவர்கள் மற்றும் நுகர்வோர்களின் நலன்களிலும் அக்கரை கொண்டு மற்றும் தொலைத் தொடர்பு துறையில் நல்ல வளர்ச்சியை ஏற்படுத்தப் பணிபுரிவார்.

6). நாகாலாந்து மாநிலம் மாநில அந்தஸ்து பெற்றதிலிருந்து "Shaurya Chakra" எனும் விருதினைப் பெரும் முதல் நாகாலாந்து காவலர் யார்?

A).Neiphiu Rio.

B).Atu Zumvu.

C).Joseph Hesso.

D).L L Doungel.

விடை : B). Atu Zumvu.

ஏப்ரல் 6,2017 அன்று ராஷ்ட்ரபதி பவனில் நடைபெற்ற விருது வழக்கும் விழாவில் நாகாலாந்தைச் சேர்ந்த, நாகாலாந்து துணைப் பிரிவு காவலர் திரு. Atu Zumvu என்பவருகு சிறப்பு மிக்க விருதான "Shaurya Chakra" விருது வழங்கப்பட்டது. 1963 ஆம் ஆண்டு நாகாலாந்து மாநிலம் மாநில அந்தஸ்து பெற்றதிலிருந்து Atu Zumvu என்பவரே முதன்முறையாக இவ்விருதினைப் பெரும் காவல் அதிகாரி ஆவர்.Atu Zumvu , 81 பொது மக்களைக் கொலை செய்த 3 National Democratic Front of Bodoland(NDFB) கைதிகளைக் கொன்றதிற்காக இவ்விருதினைப் பெற்றார்.

7). "UDAN" திட்டத்தினைக் கண்காணிப்பதற்க்காக மத்திய அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட புதிய கமிட்டி எது?

A).V L Mathew Committee.

B).Nivya Murthy Committee.

C).R N Choubey Committee.

D).Deepak Sajwan Committee.

விடை : C). R N Choubey Committee.

"UDAN" திட்டத்தினைக் கண்காணிப்பதற்க்காக மத்திய அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட புதிய கமிட்டி R N Choubey Committee ஆகும். இத்திட்டத்தின் மூலம் விமான சேவை வழங்கப்படாத விமான நிலையங்களையும் மற்றும் போதிய சேவை வழங்கிக்கொண்டிருக்கும் விமான நிலையங்களையும் இனைத்து மலிவு விலையில் அனைவருக்கும் விமானப் போக்குவரத்து சேவை வழங்கப்படும். இக் கமிட்டிக்கு Rajiv Nayan

Choubey தலைமை தாங்குவார். விமான சேவை வழங்கப்படாத விமான நிலையங்கள் மற்றும் போதிய சேவை வழங்கிக்கொண்டிருக்கும் விமான நிலையங்கள் போன்றவற்றின் பிராந்திய இனைப்பு போன்ற செயல்களை இக்குழு கண்காணிக்கும்.

8). "Matoshree" எனும் புத்தகத்தின் ஆசிரியர் யார்?

A).Sumitra Mahajan.

B).Narendra Modi.

C).Venkaiah Naidu.

D).Sushma Swaraj.

விடை : A). Sumitra Mahajan.

ஏப்ரல் 11,2017 அன்று மக்களவை சபாநயகர் திருமதி. சுமித்ரா மஹாஜன் எழுதிய "Mato shree" எனும் புத்தகத்தினை பிரதமர் நரேந்ர மோடி வெளியிட்டார். இப்புத்தகம் மால்வா பகுதியில் உள்ள ஹோல்கர் பேரரசை 1767 முதல் 1795 வரை ஆட்சி செய்த Devi Ahilyabai Holker அவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் புத்தகம். Devi Ahilyabai Holker என்பவர் திறமை மிக்க ஆட்சியாளர் மற்றும் அவரது வாழ்நாளில் மக்களால் மதிக்கப்பட்டவர் மேலும் அவர் தன் மறைவுக்குப் பிறகு துறவியாக மதிக்கப்பட்டார். பின்பற்றத்தக்க ஆட்சி, உணர்வுப் பூர்வமான நீதி மற்றும் நேர்மைக்காக நினைவு கூறப்படுகிறார்.

9). Ranstad நடத்திய "2017 Salary Trends Study "இன் கணக்கின்படி எந்த நகரம் அதிகமான ஊதியம் வழங்கும் நகரங்களின் பட்டியலில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது?

A).New Delhi.

B).Mumbai.

C).Hyderabad.

D).Bangaluru.

விடை : D). Bangaluru.

Ranstad நடத்திய "2017 Salary Trends Study" இன் கணக்கின்படி தொழில் நகரங்களின் ஊதியம் வழங்கும் பட்டியள்:

| வரிசை எண் | தொழில் நகரம் | சராசரி வருடாந்தர ஊதியம் |
|---|---|---|
| 1 | பெங்ளூர் | 14.6 லட்சம் |
| 2 | மும்பை | 14.2 லட்சம் |
| 3 | ஹைதராபாத் | 13.6 லட்சம் |
| 4 | சென்னை | 13.6 லட்சம் |
| 5 | பூனே | 13.2 லட்சம் |
| 6 | கொல்கத்தா | 11.4 லட்சம் |

கீழே கொடுக்கப்பட்டவை பல்வேறு தொழில்களும் அவற்றிற்க்கான சராசரி வருடாந்தர ஊதியம்

| வரிசை எண் | தொழில் | சராசரி வருடாந்தர ஊதியம் |
|---|---|---|
| 1 | JAVA Professionals | 18.06 லட்சம் |
| 2 | Digital Marketting | 17.09 லட்சம் |
| 3 | Automation Engineer | 14.67 லட்சம் |

10). ஜெர்மனி நாட்டிற்கான இந்தியத் தூதராக நியமிக்கப்பட்டவர் யார்?

A).Gautam Jain.

B).Mukta Dutta Tomar.

C).Gurjit Singh.

D).Yash Singhal.

விடை : B). Mukta Dutta Tomar.

ஜெர்மனி நாட்டிற்கான இந்தியத் தூதராக 1984 ஆம் பேச் IFS அதிகாரி Mukta Dutta Tomar நியமிக்கப்படவுள்ளார். இவர் Gurjit Singh ஐ அடுத்து

பதவியில் அமர்த்தப் படுவார். இவர் தற்பொழுது வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் துனைச் செயலாளராக செயல்படுகிறார்.